**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**தேதி: 19.08.2025**

**OS. No.6/2015**

**வழக்கு சாட்சி PW.1–மகேந்திரன் , த/பெ. பழனிச்சாமி (எ) பொன்னப்பன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன் . இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சிதம்பர அம்மாள் பழனிச்சாமி என்பவரது முதல் மனைவி என்றால் சரிதான் . இரண்டாம் பிரதிவாதி வேலம்மாள் எனது தாயார் என்றால் சரிதான் . 3ம் பிரதிவாதி சுசிலா பழனிச்சாமி மற்றும் சிதம்பர அம்மாளின் வாரிசு என்றால் சரிதான். பழனிச்சாமி, சிதம்பர அம்மாளுக்கும் பிறந்த ஒரே வாரிசு சுசிலா என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி சிதம்பர அம்மாள் அவரது கணவர் பழனிச்சாமியை விட்டு பிரியும்போது 3ம் பிரதிவாதி சுசிலா என்பவர் 6 மாத கைக்குழந்தை என்றால் சரிதான் . மேற்சொன்ன நான் கேட்டு தெரிந்து கொண்டவை என்றால் சரிதான். மேற்சொன்ன விபரங்களை எனது அம்மா வேலம்மாள் , அப்பா பழனிச்சாமி சொல்லி நான் தெரிந்து கொண்டேன் . சிதம்பர அம்மாள் பழனிச்சாமியிடமிடருந்து சட்டப்படி விவகாரத்து பெற்று பிரியவில்லை என்றால் சரிதான் . பழனிச்சாமி 14.11.1994 –ல் காலமானார் . பழனிச்சாமியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . பழனிச்சாமியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்திருந்தால் அவரது சட்டப்படியான வாரிசு யார் என்பது தெரியவரும் என்றால் சரிதான் , வாரிசு சான்றிதழ் உள்ளது . பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசு சிதம்பர அம்மாள் ஆவார், அதை மறைக்க வேண்டி நான் வாரிசு

சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . பழனிச்சாமியை சிதம்பரஅம்மாள் பிரிந்த வாழ்ந்த காலகட்டத்தில் சுசிலாவிற்கு 6 வயது என்றாலும், 6 மாத குழந்தையாக இருந்தபோது பிரிந்து சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் வேலம்மாளை பழனிச்சாமியை எங்கு வைத்து எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடத்தில் என்ன முறைப்படி திருமணம் செய்தார் என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது . சுசிலாவிற்கு 1986-ல் திருமணம் நடைபெற்றது , அப்போது சசிலாவிற்கு 21 வயது ஆகும். அப்போது சுசிலாவிற்கு திருமணம் நடைபெற்ற சமயத்தில் எனது வயது 7 ஆகும். எனக்கும், சுசிலாவிற்கும் வயது வித்தியாசம் சுமார் 15 வருடங்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் மட்டும்தான் வாதி என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதியான எனது தாயார் வேலம்மாள் பழனிச்சாமியின் முறையாக மனைவி என முறையிட்டு எதிருரை தாக்கல் செய்து வழக்கு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான் . 6 இலக்க சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .. நான் 6 இலக்க சொத்திற்கு தொடர்புடைய சர்வே எண், பட்டா எண் போன்ற விபரங்களை எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல . 1 முதல் 4 வரையிலான சொத்துக்கள் பழனிச்சாமிக்கு பாகவிஸ்தியின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . மேற்சொன்ன பாகவஸ்தி தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . தாவா 5 மற்றும் 6 இலக்க சொத்துக்கள் பழனிச்சாமி கிரையத்தின்பேரில் அடைந்த சொத்து என பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . அந்த கிரையம் தொடர்புடைய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி கிரைய வாங்கிய தேதி எனக்கு தெரியாது. தாவா 6 இலக்க சொத்திற்கு தொடர்புடைய பட்டா எண் மற்றும் சர்வே எண் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . 6-வது இலக்க சொத்து தொடர்புடைய மூல ஆவணங்களை தாக்கல் செய்தால்தான் அது யாருக்கு உடைமையுடைய சொத்து என்ற விபரம் தெளிவுபடும் என்றால் சரிதான், எனது அக்கா சுசிலாதான் அதை அனுபவம் செய்து வருகிறார். 1 முதல் 6 இலக்க சொத்துக்களை தவிர எனது அப்பா

பெயரில் வேறு சொத்துக்கள் இல்லை . நான் தற்போது குடியிருந்து வரும் வீடு எந்த சர்வே எண் , யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண் விபரம் தெரியவில்லை, ஆனால் வீடு மகேந்திரன் என்று என் பெயரில் உள்ளது. நான் குடியிருந்து வரும் வீடு அமைந்துள்ள நிலம் இதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் எனது அப்பா பழனிச்சாமி பெயரில் இருந்தது . இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது வீடு எனது பெயருக்கு மாற்றலாகியிருந்தது . வழக்கு தாக்கல் செய்யும்போது பழனிச்சாமி பெயரில் இருந்ததது என்றாலும் , இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது பட்டாவை எனது பெயருக்கு மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1 முதல் 6 இலக்க சொத்துக்களை தவிர மேலும் சில சொத்துக்கள் உள்ளது என்றாலும், அதை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2025.08.19 18:03:59 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.